மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்
පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත්
PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE

# தமிழ்மொழியும் இலக்கியமும்
## சுயகற்றல் கையேடு
## தரம் - 10

## அலகு 4
## தனிப்பாடல்

01. பங்கப் பழனத்து உழும் உழவர்…… இங்கு பழனம் என்பது
    1. காடு 2. வயல் 3. மேடு 4. வானம்
02. வழியும் பொதிகை வரையினிற் கால் கொண்டு………. இங்கு வரை என்பது
    1. கடல் 2. ஆறு 3. மலை 4. மழை
03. கார் தட்டிய பஞ்ச காலம்…….. இங்கு கார் என்பது
    1. மழை 2. வெயில் 3. குளிர் 4. வெப்பம்
04. கழியும் பிழைபொருட் டள்ளி நன்னூலாம் கடலிலுண்டு……இங்கு கையாளப்பட்டுள்ள அணி.
    1. உவமை அணி 2. உருவக அணி 3. சிலேடை அணி 4. தற்குறிப்பேற்றம்
05. கொங்கர்க்கு அமரா பதியளித்த கோவே…….. இங்கு அமராபதி என்பது
    1. மண்ணுலகம் 2. பூவுலகம் 3. விண்ணுலகம் 4. நரகலோகம்

### சுருக்கமான விடை தருக.

01. வெங்கட் பிறைக்கும் கரும் பிறைக்கும் மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே……
    அ. கரும் பிறை என்பது யாரைக் குறிக்கின்றது?
        மன்மதனை
    ஆ. அப்பிறைக்கும் என்பதன் பொருளைத் தருக?
        நீர் இறைக்கும்
02. ஆர் தட்டினும் தட்டு வராமலே அன்னதானத்திற்கு மார் தட்டிய துரை மால் சீதக்காதி வரோதயனே.
    அ. இப் பாடல் யாரால் பாடப்பட்டது?
        படிக்காசுப் புலவர்
    ஆ. இவ் அடிகளிலே யாருடைய சிறப்பு கூறப்பட்டுள்ளது?
        சீதக்காதியின் கொடைச் சிறப்பு
03. பாரிற் பிண்ணாக்கு முண்டாம் உற்றிடுபாம் பெள்ளெனவே யோது
    அ. இங்கு இடம் பெற்றுள்ள அணியாது?
        சிலேடை அணி
    ஆ. பிண்ணாக்கு என்ற தொடரால் உணர்த்தப்படுவன எவை?
        பாம்பு – பிளந்த நாக்கு
        எள் - பிண்ணாக்கு
04. ஆடிக் குடத்தடையு மாடும்போதே இரையும்
    அ. இப் பாடலைப் பாடியவர் யார்?
        காளமேகப் புலவர்
    ஆ. இப் பாடலிலே சிலேடையாக அமைந்த இரு பொருள்களும் எவை?
        எள் , பாம்பு
05. கழியும் பிழை பொருட் டள்ளி நன்னூலாங் கடலிலுண்டு
    அ. இப் பாடலிலே எச்சிறப்பைப் பற்றி பாடப்பட்டுள்ளது?
        காளமேகப் புலவரின் கவிச்சிறப்பு
    ஆ. இங்கு கையாளப்பட்டுள்ள அணி யாது?
        உருவக அணி ‘‘நன்னூலாங் கடலிலுண்டு’’
    நல்ல நூல்களாகிய கடல்

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

**01. பங்கப் பழனத்து உழும் உழவர் …… என்ற பாடலிலே**

1. சோழ நாட்டு வளம் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?
    - சோழ நாட்டின் வளத்தை எடுத்துக் காட்டுவதற்கு குரங்கின் செயற்பாடும், உழவர்களின் செயற்பாடும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.
    - குரங்குகள் பலாப்பழத்தைப் பறித்ததற்காக வயல்களிலே உழுகின்ற உழவர்கள் சங்குகளை எறிகின்றனர்.
    - குரங்குகள் அதற்குப் பதிலாக இளநீர்க் காய்களை எடுத்து வீசுகின்றன.
    - இவ்வாறான வளங்கள் நிறைந்த நாடு சோழ நாடாகும்
2. குலோத்துங்க சோழனின் வீரம் எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?
    - கொங்கு நாட்டவர்களைப் போரில் வென்று, அவர்களுக்கு வீர சுவர்க்கம் அளித்தான் எனச் சிறப்பிக்கப்படுகின்றான்.
    - இராச குலத்திலகா என்பதிலிருந்து அரசர் கூட்டத்திற்குத் தலைவன் என சிறப்பிக்கப்படுகின்றான்
3. வெங்கட் பிறை, கரும்பிறை, மெலிந்தப் பிறை என்பவற்றின் பொருளை விளக்குக?

    வெங்கட் பிறை – வெம்மையான பிறைச்சந்திரன்

    கரும்பிறை – கரும்பு வில்லேந்திய மன்மதன்

    அப்பிறை – கண்ணீர் சிந்தும்

**02. ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ….. என்ற பாடலிலே**

1. பஞ்ச காலத்தின் நிலை எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?
    - ஓர் தட்டிலே பொன்னும், ஓர் தட்டிலே நெல்லும் தராசிலே போட்டு சமமாக விற்கின்ற பஞ்ச காலம்
    - மழை பொய்த்துப் போய் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகின்ற பஞ்ச காலம்.
2. இப் பாடலிலே சீதக்காதியின் கொடைச் சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?
    - மழை பொய்த்துப் போன பஞ்ச காலத்திலே வீட்டுக்கு இரப்போர் வந்து கதவைத் தட்டிய போது இரப்பவரின் தட்டு நீட்டப்படு முன்னரே அன்னம் கொடுப்பதற்குத் தயாராக இருந்து மார்தட்டிய வள்ளல் சீதக்காதி.

**03. கழியும் பிழை பொருட்டள்ளி நன்னூலாங்……… என்ற பாடலிலே**

1. காளமேகப் புலவரின் கவிச்சிறப்பு எவ்வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது?
    - கழிக்கத்தக்க பொருட் பிழைகளை எல்லாம் விலக்கி, நல்ல நூல்களாகிய கடலில் இருந்து நூல்களை எல்லாம் அறிவுக்கு உணவாகக் கற்றுணர்ந்தவர்
    - அருவிகளால் நிரம்பி வழியும் பொதிகை மலையினில் நிலை கொண்டு அழகிய கவிதைகளைப் பாடுகின்ற புலவர்களின் மனமாகிய வானத்திலே இடித்து, முழங்கி, மின்னி கவி பாடக் கூடிய ஆற்றல் படைத்தவர்.

**04. ஆடிக் குடத்தடையும்…… என்ற பாடலிலே பாம்புக்கும், எள்ளுக்கும் ஒப்புவமை எவ்வாறு காண்கின்றார்?**

**பாம்பு**

- பாம்பு படம் எடுத்துக் காட்டிய பின் குடத்தினுள் புகுந்து கொள்ளும்
- பாம்பு படமெடுத்து ஆடும் போது புஸ் என்று இரையும்
- பாம்புள்ள குடத்தைத் திறந்தால் தலையை உயர்த்திக் காட்டும்
- பாம்பின் விசமானது தலைக்கேறி பரபர என்ற உணர்வை உண்டாக்கும்
- பாம்பு பிளவுபட்ட நாக்கைக் கொண்டிருக்கும்

**எள்**

- எள்ளை செக்கிலிட்டு ஆட்டிய பின் எண்ணெய் குடத்தினுள் சேர்க்கப்படும்
- செக்கில் ஆட்டும் போது கரகர என்ற ஓசை செய்யும்

- எண்ணெய் உள்ள குடத்தைத் திறந்து பார்த்தால் பார்ப்பவர் முகத்தை பிரதிபலிக்கும்
- எண்ணெயைத் தலையில் வார்த்தால் பரபரஎனக் குளிர்ச்சி உண்டாகும்
- எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்த பின் எஞ்சுவது பிண்ணாக்காகும்

## பின்வரும் உரைப்பகுதியை 40 – 50 சொற்களில் அமையக்கூடியவாறு சுருக்கி எழுதுக.

இப்பொழுது மேனாட்டு நாகரிகம் அதன் அத்திபாரத்துடன் ஆடிக்கொண்டிருக்கிறது. உலோகாயுதமென்ற மணற்றரையை அத்திவாரமாகக் கொண்ட கட்டடங்கள் எவ்வளவு மகத்தானவையாக இருப்பினும் ஒரு காலத்தில் விழுந்தே தீரும். இதற்கு உலக சரித்திரமே சாட்சியாக இருக்கிறது. மக்களுக்குப் பின் மக்கள் தோன்றி உலோகாயுதத்தை அடிப்படையாகக் கொண்டு தங்கள் நாகரித்தைக் கட்டினார்கள். ஸ்தூல வாழ்க்கையே உண்மையானதென அவர்கள் நினைத்தார்கள். ஒருவன் இறக்கும் பொழுது மேல்நாட்டு மொழிகளில் அவன் உயிரை விட்டு விட்டதாகச் சொல்கின்றார்கள். ஆனால் நம் மொழியில் அவன் உடலை விட்டு விட்டதாகச் சொல்கின்றோம். மேல் நாட்டில் மனிதன் உடம்பென்றும் அது உயிரைப் பெறுவதாகவும் நம்புகின்றார்கள். ஆனால் நாம் மனிதன் உண்மையில் ஆத்மா என்றும் நினைக்கின்றோம். இதில் மகத்தான வித்தியாசம் இருக்கின்றது. சரீரசுகம் முதலிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு உண்டாகப் பெற்ற நாகரிகங்கள் எல்லாம் கொஞ்சக் காலம் நிலை பெற்றிருந்து பின் ஒன்றன் பின் ஒன்றாக உலகில் இருந்து மறைந்திருக்கின்றன. ஆனால் இந்தியாவின் நாகரிகமும் இந்தியாவில் இருந்து பெற்ற சீன, யப்பான் தேசங்களின் நாகரிகமும் இன்னும் வாழ்ந்து வருகின்றன. அவைகளில் இக் காலத்தில் புதியதொரு மறுமலர்ச்சியும் காணப்படுகின்றது. அவை பல தடவைகள் அழிக்கப்பட்டாலும் பின்னரும் இன்னும் அதிக சிறப்புடன் கிளம்புவதைக் காண்கிறோம். உலோகாயுத நாகரிகங்கள் ஒருமுறை அழிந்தால் மறுபடியும் அவை உயிர் பெறுவது இல்லை. ஆதலால் பொறுமையுடன் இருப்பீர்களாக. எதிர்காலம் நம்மிடம் தான் இருக்கின்றது.

**விடை**

- உலோகாயுதத்தை அடிப்படையாகக் கொண்ட மேல்நாட்டு நாகரிகம் ஆடிக் கொண்டிருக்கிறது
- இவர்கள் ஸ்தூல வாழ்க்கையை உண்மை என எண்ணினர்
- ஒருவன் இறக்கும் போது மேல் நாட்டார் உயிரை விட்டதாகவும், நம்நாட்டார் உடலை விட்டதாகவும் சொல்கின்றனர்.
- இதனடிப்படையில் சரீர சுகத்தை அடிப்படையாகக் கொண்ட நாகரிகங்கள் உலகில் இருந்து விரைவில் மறைந்து விடுகின்றன.
- எனினும் நம்நாட்டு நாகரிகம் புதியதொரு மறுமலர்ச்சியுடன் கிளம்புவதைக் காணலாம்.

## பின்வரும் உரைப் பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

நாற்பது அல்லது ஐம்பது வருடங்கள் வாழ்ந்த மனிதனையும் நானூறு வருடமாக மறைய தெரியாமல் திண்டாடும் கருங்கல் மதிலையும் ஒன்றாக வைத்து இவன் நீர்மேற் குமிழியன் மறைந்து போனான். சுவரே நிலைத்து நிற்கிறது. இன்னும் குறைந்தது நானூறு வருடங்கள் நிற்கும். ஆகவே மனிதன் வாழவில்லை, மதில் தான் வாழ்கிறது என்று யாராவது சொல்கிறார்களா? எவ்வளவு காலம் இருந்தோம் என்பதைக் கொண்டன்று. எப்படி இருந்தோம் என்பதை நிர்ணயிக்க வேண்டியுள்ளது. எவ்வளவு காலம் தான் நின்ற போதிலும் சுவரை வாழ்ந்ததாகவும் நாம் கருதுவதில்லை. அது வாழவில்லை. இருக்கிற மனிதனே வாழ்கிறான. அவனுள்ளே உணர்ச்சிகளும், கருத்துக்களும், எண்ணங்களும் ஊற்றெடுத்து பெருகி வெள்ளக் காடாய் மாறிவிடுகின்றன.

01. இப்பந்தியில் கூறப்பட்டிருக்கும் பிரதான கருத்து யாது?
    மனிதன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பதை விட எப்படி இருந்தான் என்பதை வைத்தே அவனது வாழ்வு தீர்மானிக்கப்படுகின்றது.

02. சுவர் வாழ்வதில்லை என்பதற்கு இங்கு கூறப்பட்ட காரணங்கள் எவை?
உணர்ச்சிகள், கருத்துக்கள், எண்ணங்கள் என்பன சுவருக்கு இருப்பதில்லை. இவ்வாறான சுவர் எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் சுவர் வாழ்வதில்லை என்றே கூறுவார்கள்.
03. வெள்ளக்காடு என்பது எவ்வகை அணி? விளக்குக.
உருவக அணி
வெள்ளமாகிய காடு என உருவகிக்கப்பட்டுள்ளது.
06. இப்பந்தியில் குறிப்பிடப்பட்ட நீர் மேல் குமிழியன் என்பதன் பொருள் யாது? நிலையற்ற வாழ்வு உடையவன்.
07. பொருள் தருக.
வருடம் - ஆண்டு
காடு - வனம்

## அலகு 05
## கம்பியூட்டர்

01. கம்பியூட்டர் என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?
அ. முத்துலிங்கம்
02. இச்சிறுகதை எத்தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.
வடக்கு வீதி
03. இச்சிறுகதையில் வரும் பாத்திரங்கள் யாவை?
அரவிந்தன் தந்தை, அரவிந்தன், மேகலா, பணிப்பெண், தந்தையின் நண்பன்
04. "விட்டிர்ராதே! விட்டிர்ராதே! பிடி" என்று கத்தினேன்
அ. இவ்வாறு கூறியவர் யார்?
அரவிந்தனின் தந்தை
ஆ. இக்கூற்று இடம்பெறும் சிறுகதை?
கம்பியூட்டர்
05. "இந்தக் கம்பியூட்டரும் அப்படித்தான் அட்ச இருதயக் கலையில் கைதேர்ந்ததாக இருந்தது"
அ. அட்ச இருதயக்கலை என்றால் என்ன?
ஒரே பார்வையில் எண்ணும் திறன்
ஆ. கைதேர்தல் என்பதன் பொருள்
பூரண பயிற்சி பெற்றிருத்தல் / திறமை காட்டுதல்
06. 'அட்ச இருதயம் எனும் கலையை அவன் படித்திருந்தான்'
அ. இங்கு அவன் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
இருதுபர்ணன்
ஆ. இக்கலை பற்றிய செய்தி இடம்பெறும் இலக்கியம் எது?
நளவெண்பா
07. 'அந்தக் கணிப்பொறியின் வருகைக்குப் பிறகு எங்கள் வீடு ஒரு விஞ்ஞானத்துள்ளல் துள்ளி வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது"
அ. விஞ்ஞானத்துள்ளல் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது?
அறிவியல் மாற்றம் / அறிவியல் துரித வளர்ச்சி
ஆ. இக்கூற்று இடம்பெறும் சிறுகதையை எழுதியவர்?
அ. முத்துலிங்கம்
08. "இந்தக் கம்பியூட்டர் இந்தக் கூட்டலை தப்புத்தப்பாய் போட்டிருக்கு இதை ஒருக்கா பார்"
அ. கம்பியூட்டர் என்ற கலைச் சொல்லின் தமிழ் வடிவம்
கணினி
ஆ. இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
அரவிந்தனின் தாயாரால் அரவிந்தனுக்கு

09. "என்னம்மா நீங்க சும்மா கூப்பிட்டுட்ரபிள் கொடுக்கிறீங்க"
   அ. "ட்ரபிள்" என்பதன் தமிழ் வடிவம் யாது?
      பிரச்சினை
   ஆ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
      அரவிந்தனால் அவன் தாய்க்கு
10. பட்டுத்துணியில் படுவது போல விசைப்பலகையில் அவனது விரல்கள் படும்.
   அ. இதில் கையாளப்பட்டுள்ள அணி யாது?
      உவமையணி
   ஆ. இவ்வணியினை விளக்குக?
      உவமானம் - பட்டுத்துணியில் படுதல்
      உவமேயம் - அரவிந்தனின் விரல்கள்
      பொதுத்தன்மை – மென்மையாக
11. "நண்பர் கம்பூட்டருக்கு தலபுராணம் எழுதியவர் விடுவாரா? இப்போது வட்டியும் முதலுமாக அவர்களைப் போட்டு குடைகுடையென்று குடைந்தார்..."
   அ. தலபுராணம் என்றால் என்ன?
      தலமொன்றின் வரலாறுகளையும் சிறப்புக்களையும் எடுத்துக் கூறுவதாக புராண வடிவில் அமைந்த நூல்.
   ஆ. தலபுராணம் என்ற தொடர் இங்கே என்ன பொருளில் கையாளப்பட்டுள்ளது?
      கம்பியூட்டர் பற்றிய முழுவிபரத்தையும் அறிந்தவர்
12. "நண்பர் 486 கம்பியூட்டர், 486 கம்பியூட்டர் என்று உச்சாடனம் செய்தவாறே அதன் வீரப்பிரதாபங்களைப் பற்றி ஒரு பரணி பாடினார்"
   அ. இங்கு குறிப்பிடப்படும் பிரபந்தம் யாது?
      பரணி
   ஆ. உச்சாடனம் செய்தல் என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது?
      மீண்டும் மீண்டும் கூறல் / தொடர்ந்து கூறல் / உச்சரித்தல்
13. கடைக்காரனுடைய "முகலாவண்யம்" கதைப்பதற்கு ஆசை ஊட்டுவதாக இல்லை.
   அ. முகலாவண்யம் என்பதன் பொருள்?
      முக அழகு / முகவசீகரம்
   ஆ. ஆசை என்ற சொல்லின் எதிர்ப்பதம்?
      நிராசை
14. ஒருமுறை கவிகாளமேகம் பெயர் தெரியாத ஓர் ஊரில் பாஷை தெரியாத திம்மி என்ற தாசியுடன்....
   அ. இங்கு குறிப்பிடப்படும் புலவரின் பெயர் யாது?
      கவிகாளமேகப் புலவர்
   ஆ. இங்கு இடம் பெறும் வடமொழிச் சொல் யாது?
      பாஷை
15. புதுக் கேம்ஸ்களை பண்டமாற்று செய்து பாவித்தனர். கைதேர்ந்த நிபுணர்கள் போல் புதிய தலைமுறை கணிப்பொறி பற்றி நீண்ட விவாதமும் பட்டி மன்றமும் நடத்தினர்.
   அ. பண்டமாற்று என்றால் என்ன?
      ஒரு பொருளைக் கொடுத்து இன்னோர் பொருளை வாங்குதல்
   ஆ. தலைமுறை என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
      ஒருவன் பிறந்து இறக்கும் வரையுள்ள காலப்பகுதி
16. கனநாளாக ஒரு சிறுகதை என்மனதில் ஊறப்போட்டு கிடந்தது
   அ. இங்கு சிறுகதையின் பெயர் யாது?
      தொலை
   ஆ. ஊறப்போடுதல் என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது
      நீண்ட நாட்களாக நினைத்திருத்தல் / எண்ணிப்பார்த்தல்

17. அது தன்னிடம் உள்ள சூட்சுமத்தை மெல்ல மெல்ல அவிழ்த்துவிடத் தொடங்கியது
   அ. சூட்சுமம் என்பதன் பொருள்?
      இரகசியம்
   ஆ. இதிலுள்ள அடுக்குத் தொடர் யாது?
      மெல்ல மெல்ல
18. எப்படி நகல் எடுப்பது, கத்தரித்தொட்டுவது, தேடுவது, அழிப்பது, எழுத்துக்களை பெரிதாக்குவது, சிறிதாக்குவது போன்ற நுணுக்கங்களை எல்லாம் தெரிந்து கொண்டேன்.
   அ. நகல் என்பதன் எதிர்ப்பதம்
      அசல்
   ஆ. கணினியின் செயல்கள் 2 தருக?
      1. ஒட்டுவது 2. தேடுவது
      3. கத்தரித்து ஒட்டுவது 4. பெரிதாக்கல், சிறிதாக்கல்
19. பவித்திரமான எங்கள் குடும்ப சந்தோசத்திலும் அந்நியோனியத்திலும் இப்படியான ஒரு கீறல் விழுந்துவிட்டதே என்று எனக்குள் வேதனையாக இருந்தது.
   அ. பவித்திரம், அந்நியோனியம் என்ற சொற்களின் பொருள் யாவை?
      பவித்திரம் - தூய்மை / பரிசுத்தம்
      அந்நியோனியம் - நெருக்கம்
   ஆ. இங்கு கீறல் என்பதால் நீர் புரிந்து கொள்வது யாது?
      இடைவெளி
20. இப்பொழுது அச்சடித்தால் பிறின்டர் "கர்க் கர்க்" என்று ஊரையே கூட்டிவிடும்
   அ. பிறிண்டர் என்ற கலைச்சொல்லின் தமிழ்ப்பதம் யாது?
      அச்சுப்பொறி
   ஆ. "கர்க் கர்க்" என்பது எவ்வகைத் தொடர்
      இரட்டைக் கிளவி

## பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக

01. அன்றிலிருந்து புகையிலைக்கன்றுக்குப் பாத்தி கட்டுவது போல கணிப்பொறித் தளத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியில் நானும், இன்னொரு பகுதியில் மனைவியும், மீதியில் அரவிந்தனுமாகப் பயிர் செய்தோம். எங்கள் படைப்புக்களை இந்த வரப்புக்குள் வைத்துக் கொண்டோம். ஆரம்பத்தில் எனக்குக் கம்பியூட்டருடன் ஏற்பட்ட பிணக்கு நீங்கி ஓர் இணக்கம் ஏற்பட்டது. அது தன்னிடமுள்ள சூட்சுமத்தை எல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்துவிடத் தொடங்கியது.

அ. கம்பியூட்டரை இலகுவாகப் பயன்படுத்துவதற்குத் தான் கையாண்ட உத்தியை ஆசிரியர் எவ்வாறு விபரிக்கிறார்.
   புகையிலைக் கன்றுக்கு பாத்தி கட்டுவது போல கணிப்பொறித் தளத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து படைப்புக்களை எல்லைப்படுத்தி வைத்துக்கொண்டோம் என்பதனூடாக.

ஆ. "சூட்சுமத்தை எல்லாம் மெள்ள மெள்ள அவிழ்த்துவிடத் தொடங்கியது" எனும் வாக்கியத்தின் ஊடாக விளங்கிக் கொள்ளக்கூடியது யாது?
   கம்பியூட்டர் பற்றிய தொழிநுட்பங்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பரிச்சயமாதல்

02. இந்தக் கஷ்டகாலத்திலும் என் மகன் அதனுடன் மிகவும் வாஞ்சையாகப் பழகினான். மணிக்கணக்காக விளையாடிக் கொண்டிருப்பான். நீல நிற யானையும், சிவப்பு நிறக் குதிரையும் வரைவான். பள்ளியில் கொடுக்கும் வீட்டு வேலைகளை கணிப்பொறியில் செய்வான். கதை சொல்லும் போது "ம்" சொல்லுவது போல கம்பியூட்டரும் "ங்ம். ங்ம்" என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருக்கும். அவன் ஏதாவது தப்பாகச் செய்யும்போது தான் அப்படி எச்சரிக்கும் என்மகன் அந்த நேரங்களில் "கோவிக்காதே, கோவிக்காதே" என்று சொல்லி அதை சமாளிப்பான்.

அ. அரவிந்தன் கணிப்பொறியில் செய்யும் வேலைகள்?

- மணிக்கணக்காக கணிப்பொறியில் விளையாடுதல்
- நீலநிற யானையும் சிவப்புநிற குதிரையும் வரைதல்
- பள்ளியில் கொடுக்கும் வீட்டு வேலைகளை கணினியில் செய்தல்

ஆ. "வாஞ்சையுடன் பழகுதல்" என்ற தொடரை விளக்குக.
பெருவிருப்புடன் / மிகுந்த ஆசையுடன் பழகுதல்

03. இப்படியாக சந்தி பிரிக்காத பாடல் போல தலை சுற்றியது விவகாரம் மறுபடியும் நான் அந்தக் கடைக்குக் கம்பியூட்டரை கொத்துக் கொத்தாய் ஆராய்ச்சி செய்து வித்துவான் பட்டம் பெற்ற ஒரு நண்பரோடு படையெடுத்தேன். நண்பர்கள் கம்பியூட்டருக்க தலபுராணம் எழுதியவர் விடுவாரா! இப்போது வட்டியும் முதலுமாக அவர்களைப் போட்டுக் குடைகுடை என்றுகுடைந்தார். அவர்களுடைய சம்பாஷனை முற்றிலும் புதிய பாஷையில் நடைபெற்றது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

அ. "சந்தி பிரிக்காத பாடல்போல தலைசுற்றியது" என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது?
கம்பியூட்டர் பற்றிய விடயங்களை அறிந்து கொள்ள முடியாத தன்மை / பொருள் விளக்கமற்ற தன்மை.

ஆ. நண்பனின் திறமை எவ்விதம் காட்டப்படுகிறது?
கம்பியூட்டர் பற்றி ஆராய்ச்சி செய்து வித்துவான்பட்டம் பெற்றவர். கம்பியூட்டரின் வரலாற்றை நன்கு அறிந்தவர்.

04. சில சமயங்களில் "அரவிந்தா! அரவிந்தா! இஞ்ச வா!" என்று யானை ஆதிமூலத்தைக் கூப்பிட்டதைப் போல் ஓலமிடுவாள் என் மனைவி. கம்பியூட்டர் இந்தக் கூட்டலை தப்புத் தப்பாய் போட்டிருக்கு இதை ஒருக்கா பார்" என்பாள் என்னுடைய மகனும் "என்னம்மா நீங்க சும்மா சும்மா கூப்பிட்டு ரபிள் கொடுக்கிறீங்கள் என்று நடப்பு விட்டுக் கொண்டே போய் அந்தச் சில்லறைத் தகராற்றைச் சரிசெய்து விட்டு வருவான். இப்படியாக அந்தக் கணிப்பொறியின் வருகைக்கு பிறகு எங்கள் வீடு ஒரு விஞ்ஞான துள்ளல் துள்ளி வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது.

அ. கணினியின் வருகையால் வீட்டில் ஏற்பட்ட மாற்றம் யாது?
வீட்டில் ஓர் அறிவியல் மாற்றம் ஏற்பட்டது.

ஆ. அரவிந்தனின் தாய் ஓலமிட்டதை ஆசிரியர் எதற்கு உவமித்துள்ளார்?
யானை ஆதி மூலத்தை கூப்பிட்டதைப் போல

05. முதல் நாளே நான் ஒரு பெரிய உண்மையைக் கண்டு பிடித்தேன். கணிப்பொறி என்பது ஒரு இராட்சத வேலைக்காரன். சொல்லும் வேலைகளை எல்லாம் கச்சிதமாகச் செய்யும். ஆனால் தவறான கட்டளை பிறப்பித்து விட்டாலே தானே எஜமான் ஆகிவிடும். பிறகு நீங்கள் அதற்கு அடிமைதான். பயந்து இதை அணுகினால் அது எட்டப் போய்விடும். எனது ஒன்பது வயது மகன் மீன் குஞ்சு நீந்துவது போல உற்சாகமாக ஒட்டிப் பழகிவிட்டான். கணிப்பொறி அவனுக்கு நிரம்பவும் பிடித்துவிட்டது. அதுவும் தன்னுடைய இரகசியக் கதவுகளை அவனுக்கு தங்கு தடையின்றி திறந்துவிடத் தயாரானது.

அ. இங்கு கணிப்பொறியின் இயல்புகளாக குறிப்பிடப்படுபவை யாவை?
ஒரு இராட்சச வேலைக்காரன்
சொல்லும் வேலைகளை கச்சிதமாகச் செய்யும்
தவறான கட்டளைகளைப் பிறப்பித்துவிட்டால் தானே எஜமானாக மாறிவிடும் ஒரு சாதனம்

ஆ. கணிப்பொறியை எவ்வாறு அணுக வேண்டும்,
பயந்து பயந்து அணுகாமல் மீன்குஞ்சு நீந்துவது போல உற்சாகமாக அதனை ஒட்டிப் பழக வேண்டும் / துணிவுடன் கற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

## பகுதி III
## கட்டமைப்பு வினாக்கள்

**வினா 01)**
கம்பியூட்டர் என்ற சிறுகதையில்
அ. கம்பியூட்டர் கொள்வனவு
ஆ. கம்பியூட்டரால் குடும்பத்தில் ஏற்பட்ட மாற்றம்
ஆகியன விளக்கப்படுமாற்றினைத் தருக.

**விடைக் குறிப்புகள்**
அ.
- கம்பியூட்டர் பற்றிய அனுபவமின்றி வாங்கச் செல்லுதல்
- கடைக்காரனுடைய வினாவுக்கு விடையளிக்க முடியாது திரும்புதல்
- விடயம் தெரிந்த நண்பர் ஒருவரை அணுகியமை
- அவர் துணிவுடன் மீண்டும் கடைக்குச் செல்லுதல்
- கம்பியூட்டருடன் ஏனைய பொருட்களையும் வாங்கியமை
- கம்பியூட்டரை எப்படி வாங்குவதென்பது தொடர்பான விடயங்களை ஓரளவு அறிந்தும் அறியாதும் வாங்குதல்

ஆ.
- புதிதாய் பிறந்த குழந்தை வீட்டை அடியோடு மாற்றியது போல்
- கம்பியூட்டர் வருகையினால் மகிழ்வு
- மேகலா பொட்டு வைத்தல், அரவிந்தன் ஓம் ஸ்ரீ ராம் என எழுதுதல்
- அதன் புதுமணத்தை அனுபவித்தல்
- மேகலா பொழுதுபோக்காகவும், வீட்டுக் கணக்கு, சீட்டுக் கணக்கு பார்ப்பதற்கு உதவுதல்
- கம்பியூட்டர் பரிபாஷையிலேயே குடும்பத்தினர் உரையாடுதல்
  (அம்மா give me a mega byte)
- கணவன் மனைவிக்கிடையே கம்பியூட்டர் பாஷையினை கையாளுதல்
  (If you want to Escape press here)
- கதையினை காகிதத்தில் எழுதாது கணினிப் பொறியில் எழுதிச் சேமித்தல்.

**வினா 02**
கம்பியூட்டர் என்ற சிறுகதையில் அதன் ஆசிரியர்
அ. கம்பியூட்டர் பற்றி விபரிப்பனவற்றையும்
ஆ. அதற்கு அவர் கையாண்ட உத்திகளையும் விளக்குக.

**விடைக் குறிப்புகள்**
அ.
- கம்பியூட்டரை ஆண், பெண் என இரண்டாக வகைப்படுத்தல்
- கணிப்பொறி இராட்சத வேலைக்காரன். தவறான கட்டளைகளைக் கொடுத்தால் தானே எஜமானாக ஆகிவிடும்.
- சொல்லும் வேலைகளைக் கச்சிதமாகச் செய்யும்
- பயந்து பயந்து அணுகினால் எட்டப் போய்விடும்

ஆ. கையாண்ட உத்திகள்
- கம்பியூட்டர் கொள்வனவு முதல் கம்பியூட்டர் வீட்டிற்கு கொண்டு வரும்வரைக்கும் இடையே நடைபெற்ற நுணுக்கமான விபரிப்பு.
- எளிய மொழிப் பிரயோகம், உரையாடல் பாங்கு
- நகைச்சுவைக் கையாளல்
  -அமெரிக்கப் பெண்ணிடம் அகப்பட்டுக் கொண்ட விதம்
  -காளமேகப் புலவர் திம்மி என்ற தாசியுடன் பட்ட துன்பம்
  இவை போன்ற விடயங்களை எடுத்துக் காட்டி விளக்குதல்

- கணினியை மனித நிலைப்படுத்திப் பேசுதல்
- நடைமுறை அனுபவங்களை உவமை உதாரணங்களாக காட்டுதல்.

**வினா 03**

கம்பியூட்டர் என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு
அ. கணிப்பொறிக்கும் இளந்தலைமுறைக்கும் இடையிலான பிணைப்பு
ஆ. இச்சிறுகதையில் பயன்படுத்தப்பட்டுள்ள உவமைத் தொடர்களைக் குறிப்பிடுக.

**விடைகள்**

அ. அரவிந்தன் என்ற சிறுவன் மூலமாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது

- சுயமாக அதன் பல விடயங்களை கற்றுக் கொண்டமை
- மீன்குஞ்சு நீந்துவது போல உற்சாகமாக அதனோடு ஒட்டிப் பழகிவிட்ட தன்மை
- பாடசாலைப் பாடங்கள் செய்தல், கேம்ஸ் விளையாடுதல், படங்கள் வரைதல் என அதனுடன் அதிக நேரத்தைச் செலவிடல்.
- கம்பியூட்டரின் சொற்களை சாதாரண பேச்சு வழக்கில் கையாளல்
  உ-ம் : Give me a mega byte
- தாய் மேகலாவுக்கு கணினி தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளை அரவிந்தன் தீர்த்து வைத்தல்
- விரைவாக தட்டச்சு செய்வதற்குப் பழகியமை
- தந்தைக்கு கணினியில் பல விடயங்களை அறிமுகப்படுத்தியமை
  உ-ம் : நகல் எடுப்பது, கத்தரித்து ஒட்டுவது
- தொலை சிறுகதை காணாமல் போய் கணினியைப் பயன்படுத்தாது விட்டதன்பின் அரவிந்தன் மூலமாக அக்கதை கண்டுபிடிக்கப்பட்டமை.

ஆ.

- கல்லுளிமங்கன் போல் சப்பளித்திருந்தது
- ஆர்மோனியப் பெட்டிபோல
- கத்தரிக்கோல் வெட்டுவது போல் நடந்து வந்து
- சந்திபிரிக்காத பாடல்போல் தலை சுற்றியது
- ஆலாத்தி எடுக்க நிற்பது போல் ஆவலோடு வாசலில் நிற்றல்
- மீன்குஞ்சு நீந்துவது போல
- கைதேர்ந்த நிபுணர்கள் போல
- வீட்டை அடியோடு மாற்றுவது போல
- முட்டியில் கள்ளுப் பொங்குவது போல
- புகையிலைக் கன்றுக்கு பாத்தி கட்டுவது போல
- அம்மி பொளிவது போல ஒரு சத்தம் வரும்
- அவன் விரல்கள் வண்ணாத்துப் பூச்சி பறப்பது போல பறந்தபடியே இருக்கும்
- நீத்துப் பூசணிக்காய் போல
- பெற்றோரை ஏமாற்றி களவாக ஓடிவந்த காதலியைபோல

**வினா 04**

கம்பியூட்டர் என்ற சிறுகதையை ஆதாரமாகக் கொண்டு
அ. அரவிந்தனின் தந்தை
ஆ. அரவிந்தன் ஆகிய பாத்திரப் படைப்புக்கள் பற்றி குறிப்பிடுக

**விடைகள்**

அ.

- கம்பியூட்டர் வகைகளைக் கண்டு ஆச்சரியம் கொள்பவர்
- சிறுகதை ஆசிரியராக வலம் வரும் இவர் இக்கதை முழுவதும் கதை சொல்லலும் பிரதான பாத்திரமாக படைக்கப்பட்டுள்ளார்.
- கம்பியூட்டரின் தாக்கத்திற்கு அடிமையான பாத்திரம்

ஆ. அரவிந்தன்

- ஒன்பது வயது மகன்
- கம்பியூட்டரை ஆவலோடு எதிர்பார்த்திருப்பவன்
- கம்பியூட்டர் பரிபாஷையில் கதைப்பவன்
- கணிப்பொறியின் விடயங்களை தந்தைக்கு சொல்லிக் கொடுப்பவன்
- கணிப்பொறியில் யானை, குதிரை என்பவற்றை வரைபவன்
- பள்ளியில் கொடுக்கும் வீட்டு வேலைகளை கணினியில் செய்பவன்
- ஓயாது கணிப்பொறியோடு பழகுகின்றவன்
- கதையில் புதிய தலைமுறையினை பிரதிநிதி என்று சொல்லத்தக்க வகையில் வளர்க்கப்பட்டுள்ளான்.

## பல்தேர்வு வினாக்கள்

### தடித்த எழுத்தில் இருக்கும் சொல்லுக்கு பொருத்தமான ஒத்த சொல்லின் கீழ் கீறிடுக.

01. ஆண் பெண் **பேதம்** இருப்பது எனக்கு கனநாளாகத் தெரியாது. இங்கு பேதம் என்பதன் கருத்து.
    1. ஒற்றுமை  2. மாற்றம்  3. வேதம்  4. வேறுபாடு
02. எனக்கு பிரச்சினையின் **பிரமாண்டம்** வெளிச்சமானது. இங்கு பிரமாண்டம் என்பதன் கருத்து.
    1. மிகப்பெரிய  2. சிறிய  3. பெரிய  4. மிகச்சிறிய
03. **வனப்புள்ள** பணிப்பெண் ஒருத்தி தென்பட்டாள். இங்கு வனப்பு
    1. அளவு  2. அலகு  3. அழகு  4. அளகு

**தடித்த எழுத்திலுள்ள சொல்லின் எதிர்ப்பதம் தருக.**

04. அது இருந்த விதமும் **தோற்றமும்** வெறுப்பைக் கூட்டியது. இங்கு தோற்றம் என்பதன் எதிர்ப்பதம்.
    1. மறைவு  2. உதயம்  3. உதிர்வு  4. வெளிச்சம்
05. ஆர்வமான **கனவுகளுடன்** காத்திருந்தாள். இங்கு கனவு என்பதன் எதிர்ப்பதம்.
    1. நனவு  2. நினைவு  3. கற்பனை  4. எண்ணம்

## பகுதி – II

**குறு வினாக்கள்**

1. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
   கூனலிளம் பிறை முடித்த வேணியலங்காரர்
2. ''அளி'' என்னும் சொல் பெயராகவும், வினையாகவும் வரத்தக்கதாக தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.
3. பின்வரும் பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்குத் தொடராக மாற்றி எழுதுக.
   அவவோடை நான் என்னத்தைப் பேசுறது?
4. உழவன் வயலை உழுதான். இதனை செயப்பாட்டு வினையாக மாற்றி எழுதுக.
5. அம்மா காய்கறி வாங்கச் சந்தைக்குச் சென்றார். இவ்வாக்கியத்தின் தலைமைத் தொடரையும், சார்புத் தொடரையும் எழுதுக.
6. நேர்முக வர்ணனையாளனுக்கு இருக்க வேண்டிய இரண்டு பண்புகள்.
   சரளமாகப் பேசும் திறன், வெட்டிப்பேசும் திறன், விடய அறிவு, முரண்படக் கூறுதல்

7. தோள் கொடுத்தல் என்னும் மரபுத்தொடர் உணர்த்தும் பொருள் யாது?
8. வடசொல்லின் இரு வகைகளும் எவை?
9. நாயைக் கண்டு ஓட்டம் எடுத்தேன் நான். இவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலையை இனங்கண்டு எழுதுக.
10. ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு
இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற பெயர்ச்சொல், உரிச்சொல் என்பனவற்றைத் தருக.

10X2 = 20 புள்ளிகள்

**விடைகள்**

1. கூனல்/இளம்/பிறை/முடித்த/வேணி/அலங்காரர்
2. அளி – பெயர் - வண்டு எனும் பொருளில் வாக்கியம்
வினை - கொடுத்தல் எனும் பொருளில் வாக்கியம்
3. அவரோடு/ அவருடன் நான் எதனைப் பேசுவேன்?
4. உழவனால் வயல் உழப்பட்டது
5. அம்மா சந்தைக்குச் சென்றார் - தலைமைத் தொடர்
காய்கறி வாங்க – சார்புத் தொடர்
6. சரளமாகப் பேசும் திறன், விடய அறிவு
7. உதவி செய்தல்.
8. தற்சமம், தற்பவம்
9. எழுவாய் - நான்
பயனிலை – எடுத்தேன்.
10. பெயர்ச்சொல் - மீன், கொக்கு
உரிச்சொல் - உறு

## பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையுமாறு எழுதுக.

நாவையும் அடக்கி, சிந்தனையையும் ஒருமுகப்படுத்தி வாக்கும் மனமும் செயலின்றி இருத்தல் மௌனம் ஆகும். இது மிக உயர்ந்த நிலை. ஞானம் கைவரப் பெற்றவர்களுக்குத்தான் இது சாத்தியமாகும். எம்மில் ஞானம் கைவரப்பெற்றவர் எத்தனைபேர் என்பதை நாம் அறியோம். ஆயினும் ஞானம் கைவரப்பெறாதவர்கள் மிகப்பலர் என்பது மட்டும் உண்மை. மௌனத்தை வாழ்வில் மேற்கொள்வதற்கு ஞானம் வரும் வரை காத்திருக்கவேண்டியதில்லை. அப்படியாயின் மௌனத்தினால் கிடைக்கும் பலாபலன்களை என்றுமே அனுபவிக்கமுடியாதவர்களாகி விடுவோம். எனவே எங்களால் இயன்றளவு உரிய வேளைகளில் ஏற்ற சந்தர்ப்பங்களில் மௌனத்தைக் கடைப்பிடிப்பதால் பல தொல்லைகள், வீண்சோலி தொந்தரவுகள் ஆகியவற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடிகின்றது. வாய் மட்டும் பேசாதிருந்தால் நாம் ஊமையாகிவிடுவோம் என்று அஞ்சத் தேவையில்லை. வாயினால் இனியவற்றை, இன்பமானவற்றை, பிறருக்குத் துன்பம் பயக்காதவற்றை பேசக்கூடாது என்று தடை போடப்படவில்லை. ஆனால் கடுஞ்சொற்கள், வன்சொற்கள், வீண்வார்த்தைகள், பொய்யுரைகள், சூளுரைகள், புறங்கூறல் ஆகியவற்றை வாயினால் உரைக்காது அதனால் பிறருக்கு ஆத்திரமூட்டாது மௌனம் சாதிப்பதனால் எத்தனையோ கொடிய விளைவுகளைத் தவிர்த்த பெருமைக்கு ஆளாகின்றோம். அப்படி மௌனம் மேற்கொள்ளப்படுவதனால் பேசத் தெரியாதவர்களென்றோ, பலம் அற்றவர்களென்றோ? தோல்வியைத் தழுவியவர்கள் என்றோ எண்ணுவது அறிவீனமாகும். உண்மையில் பலம் உள்ளவர்களே மௌனத்தைக் கடைப்பிடிக்க முடியும். மௌனத்திலே தான் பலம் அதிகம். மௌனம் தோல்வியின் அறிகுறியல்ல. அது வெற்றியின் சிகரம்.

(10 புள்ளிகள்)

**சுருக்கம் - விடை**

- ➢ சிந்தனையை ஒருமுகப்படுத்தி வாக்கும், மனமும் செயலின்றி இருக்கும் உயர்ந்தநிலை மௌனம்.
- ➢ ஞானம் கைவரப்பெற்றவர்கள் மௌனத்தை இலகுவில் கடைப்பிடிப்பர்.
- ➢ மௌனத்தைக் கடைப்பிடிப்பதால் பல நன்மைகளைப் பெற முடியும்.
- ➢ மௌனம் என்பதால் பேசாதிருக்கவேண்டும் என்பதில்லை.
- ➢ நல்லவற்றை, இனியவற்றைப் பேசலாம்.
- ➢ தீங்கானவற்றைப் பேசக்கூடாது.
- ➢ மௌனம் மேற்கொள்வது பலவீனமானதல்ல.
- ➢ மௌனம் பலமானது. வெற்றியைத் தருவது.
(ஒரே பந்தியில் எழுத வேண்டும்)

## பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன்கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சிறுகதை என்பது ஓர் உரைநடை ஆக்க இலக்கியம். மக்களால் மிகவும் விரும்பிப் படிக்கப்படும் ஓர் இலக்கிய வடிவமான சிறுகதை காலத்திற்குக் காலம் வளம்பெற்று வளர்ந்து வருகின்றது. சிறுகதைக்கு ஒரு திட்டமான வரைவிலக்கணம் கூறுவது கடினம். அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் குதிரைப் பந்தயம் போன்று சிறுகதையின் தொடக்கமும் முடிவும் விரைவும் சுவையும் மிக்கதாக விளங்க வேண்டுமெனவும் அரைமணி முதல் ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்தில் படித்து முடிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டுமெனக் கூறியுள்ளார். சிறுகதையானது அளவில் சிறியதாகவும் இறுக்கமும் கட்டுக்கோப்பும் முழுமையும் ஒருமைப்பாடும் கொண்ட அமைப்புடையதாகவும் இருத்தல் வேண்டும். செம்மையான பாத்திர வார்ப்பும் சொற்சிக்கனமும் உயிர்த்துடிப்பும் செறிவும் திட்பமும் மிக்க நடையும் கதைக்குப் பொருத்தமான தொடக்கமும் முடிவும் சிறுகதைக்கு இன்றியமையாதன. சிலவற்றைக் கூறிப் பலவற்றைச் சிந்திக்க வைப்பதாகச் சிறுகதை அமைய வேண்டும்.

அ) சிறுகதைக்கு இன்றியமையாதவை எனக் கூறப்பட்டுள்ளவை எவை?

ஆ) சிறுகதை எவ்வகை இலக்கிய வடிவத்தைச் சார்ந்தது?

இ) அமெரிக்க எழுத்தாளர் சிறுகதைக்கு முன்வைக்கும் வரைவிலக்கணம் யாது?

ஈ) சிறுகதை எவ்வகையான அமைப்புடையதாகக் காணப்படவேண்டும்?

உ) சிறுகதை முடிவு எவ்வாறு அமையவேண்டும்?

**விடைகள்**

அ) செம்மையான பாத்திர வார்ப்பும், சொற்சிக்கனமும், உயிர்த்துடிப்பும் செறிவும், திட்பமும் மிக்க நடை, கதைக்குப் பொருத்தமான தொடக்கமும் முடிவும் இன்றியமையாதன.

ஆ) உரைநடை ஆக்க இலக்கியம்.

இ) குதிரைப் பந்தயம் போன்று தொடக்கமும், முடிவும்,சுவையும், விரைவும் மிக்கதாக விளங்கவேண்டும். அரைமணி முதல் ஒன்று அல்லது இரண்டுமணி நேரத்தில் படித்து முடிக்கக் கூடியதாகவும் இருக்கவேண்டும்.

ஈ) அளவில் சிறியதாகவும் இறுக்கமும் கட்டுக்கோப்பும், முழுமையும், ஒருமைப்பாடும் உடையதாகவும் இருக்க வேண்டும்.

உ) சிலவற்றைக் கூறிப் பலவற்றைச் சிந்திக்க வைப்பதாக அமைய வேண்டும்.

## பொருத்தமான சொற்களை இணைக்குக.

| | |
|---|---|
| 1. Green house effect | கருத்தரங்கு |
| 2. Vibrator | ஊடகம் |
| 3. Internet | கேலிச்சித்திரம் |
| 4. E-Mail | அருங்காட்சியகம் |
| 5. Digital | பாதீடு/வரவுசெலவுத்திட்டம் |
| 6. Cartoon | எண்மானம் |
| 7. Budjet | மின்னஞ்சல் |
| 8. Media | இணையம் |
| 9. Museum | அதிரி |
| 10. Seminar | பச்சை வீட்டு விளைவு |

## பெயர்ச் சொற்பாகுபாடு

1. இடுகுறிப் பெயர், காரணப் பெயர், காரண இடுகுறிப் பெயர்

   அ. **இடுகுறிப் பெயர்** :- காரணம் எதுவுமின்றி வழங்கும் பெயர்

   உ – ம்:- மரம், கடல்

   ஆ. **காரணப் பெயர்** :- ஏதாவது காரணம் பற்றி வழங்கும் பெயர்

   உ – ம்:- பறவை, மண்வெட்டி

   இ. **காரண இடுகுறிப் பெயர்** :- காரணம் கருதிய பொழுது பல பொருட்களைக் குறித்தாலும் அவற்றுள் ஒன்றுக்கு மட்டும் வழங்கும் பெயர்.

   உ – ம் :- நாற்காலி, முள்ளி

2. **ஆக்கப் பெயர்** :- பெயர் அல்லது வினைச்சொல்லுடன் விகுதி சேர்ந்து வருவது

   உ – ம்:- காவல் + காரன் - காவற்காரன்

   முதல் + ஆளி - முதலாளி

   முயல் + சி - முயற்சி

3. **கூட்டுப் பெயர் :-** இரண்டு அல்லது பல சொற்களை இணைத்து வழங்கும் பெயர்

   உ – ம் :- வான் + ஒலி – வானொலி

   எறி + கணை – எறிகணை

4. **மாற்றுப் பெயர்** :- ஒரு பெயர்ச்சொல்லுக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய இன்னொரு பெயர்ச்சொல்

   உ – ம்:- நான், நீ, அவன்

5. **தொழிற் பெயர்** :- வினையடியாகப் பிறந்து வினைநிகழ்வினை அல்லது நிகழாமையை உணர்த்துவது

   உ - ம்:- நடத்தல், ஓடுதல்

6. **வினையாலணையும் பெயர்** :- ஒரு செயலின் பெயர் கொண்டு செயல் செய்தவனை அழைப்பது.

   உ – ம்:- படித்தவன், நடந்தவன்

## வினைச்சொல் வகைகள்

1. **தெரிநிலை வினை – குறிப்பு வினை**

   காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினை

   நடந்தான், போகிறான், வருவான்

   காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் சொல்பவரது குறிப்பினாற் காட்டுவது குறிப்பு வினை

   நல்லவன், பெரியவன்

2. **முற்று வினை – எச்ச வினை**

   பால் காட்டும் விகுதி பெற்றுப் பொருள் முற்றுப்பெற நிற்பது முற்று வினை

   நடந்தான், ஓடினான், சிரித்தான்

   பால் காட்டும் விகுதி பெறாததாய் முற்றுப் பெறாமல் எச்சமாக நிற்பது எச்சவினை

   நடந்த, ஓடி

   எச்ச வினை இருவகைப்படும்

   அ. பெயரைக் கொண்டு முடிவது பெயரெச்சம்

   அழகிய (கண்கள்)

   ஓடிய (மாடு)

   ஆ. வினையைக் கொண்டு முடிவது வினையெச்சம்

   நடந்து (முடித்தான்)

   பார்த்து (சிரித்தான்)

3. **செய்வினை – செயப்பாட்டு வினை**

   எழுவாயைக் கருத்தாவாகக் கொள்ளும் வினை செய்வினை

   உ – ம்:- வைரமுத்து பாடலை இயற்றினார்

   செயப்படுபொருளை எழுவாயாகக் கொள்ளும் வினை செயப்பாட்டு வினை எனப்படும்.

   உ – ம்:- பாடல் வைரமுத்துவால் இயற்றப்பட்டது.

4. **தன்வினை – பிறவினை**

   ஒரு செயலின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும்.

   உ – ம்:- அம்மா சோற்றை உண்டாள்

   ஒரு செயலின்பயன் எழுவாய் அல்லாத வேறொருவரைச் சேருமாயின் அது பிறவினை எனப்படும்.

   உ – ம்:- அம்மா சோற்றை ஊட்டினாள்

## நால்வகைச் சொற்கள்

1. **இயற்சொல்**

   கற்றவரும் கல்லாதவரும் பொருள் அறிந்து வழங்கும் சொல்

   உ – ம்:- கிளி, சொன்னான்

2. **திரிசொல்**

   கற்றவருக்கு மட்டும் விளங்கும் இலக்கிய வழக்குச் சொல்

   உ – ம்:- கிள்ளை, செப்பினான்

3. **வடசொல்**

   சமஸ்கிருத மொழியிலிருந்து தமிழிற் கலந்த சொல்

   இருவகைப்படும்

   அ) தற்சமம்

   தமிழுக்கும் சமஸ்கிருதத்திற்கும் பொதுவான எழுத்துக்களாலாகி தமிழில் வழங்குவது

   உ – ம்:- கமலம், காரணம்

ஆ)தற்பவம்

சமஸ்கிருதத்திற்குரிய எழுத்துக்கள் தமிழுக்கு ஏற்றபடி திரிந்து வழங்குவது

உ – ம்:- அபிடேகம், அரன்

4. **திசைச் சொல்**

வடமொழி தவிர்ந்த ஏனைய மொழிகளிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்கள்.

உ – ம்:- ஆங்கிலம் - ரெலிபோன், பேப்பர்.

போர்த்துக்கேயம் - கடதாசி, அலுமாரி

## அடைமொழிகள்

ஒரு பெயர் அல்லது வினைக்கு அடையாகப் பயன்படுத்தும் சொற்கள் அடைமொழிகள் ஆகும். இருவகைப்படும்.

1. **பெயரடை**

பெயர்ச்சொற்களைச் சிறப்பிக்க வரும் அடைமொழிகள்

நல்ல (புத்தகம்)

பெரிய (மரம்)

பெயரடையும் இருவகைப்படும்.

அ. தனிப்பெயரடை

தனிச்சொற்கள் பெயரடையாக வருவது

புதிய, சிறிய, நல்ல

உ – ம் :- புதிய புத்தகம்

ஆ. கூட்டுப்பெயரடை / ஆக்கப்பெயரடை

பெயர்ச்சொற்களைச் சிறப்பித்து வரும் கூட்டுச்சொல் பெயரடையாக வந்தால் அது ஆக்கப் பெயரடை/ கூட்டுப் பெயரடை எனப்படும்.

கருணையுள்ள, இனிமையான கருணையுள்ள மனிதர்

**2.வினையடை**

வினைச்சொல்லைச் சிறப்பித்து வருவது வினையடை எனப்படும்.

இது இருவகைப்படும்

1. **தனிவினையடை**

வினைச்சொல்லைச் சிறப்பித்து வரும் சொல் தனிச்சொல்லாக அமைந்தால் அது தனிவினையடை எனப்படும்.

நாளை, இன்று,

உ – ம்:-நாளை போவான்

2. **கூட்டு வினையடை**

பிரிபடக்கூடிய கூட்டுச்சொல் அடையாக வந்தால் அது கூட்டு வினையடை எனப்படும்.

வேகமாக, இனிமையாக,

உ - -ம்:- வேகமாக ஓடினான்

## தொடர்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட சொல் தொடர்ந்து வருவது தொடர் எனப்படும்.

தொடர்கள் இரு வகைப்படும்.

### தொகாநிலைத் தொடர்

எந்த உறுப்பும் மறைந்து வராத தொடர் தொகாநிலைத் தொடர் எனப்படும்.

இது ஒன்பது வகைப்படும்

1. **எழுவாய்த் தொடர்** - எழுவாயைக் கொண்டது

செந்தூரன் வந்தான்

2. **விளித்தொடர்** - ஒருவரை விளித்து அழைப்பது

கண்ணா, வா

3. **வேற்றுமைத் தொடர்** - வேற்றுமை உருபைக் கொண்டது.
   வீட்டைக் கட்டினான்
4. **வினைமுற்றுத் தொடர்** - வினை முற்றைக் கொண்டது.
   பாடினார் புலவர்
5. **பெயரெச்சத் தொடர்** - பெயரெச்சத்தைக் கொண்டது.
   அழகிய பூக்கள்
6. **வினையெச்சத் தொடர்** - வினையெச்சத்தைக் கொண்டது.
   ஆடி மகிழ்ந்தான்
7. **இடைச் சொற்றொடர்** - இடைச்சொல்லைக் கொண்டது
   இனிப்போவேன்
8. **உரிச்சொற்றொடர்** - உரிச்சொல்லைக் கொண்டது
   சாலச் சிறந்தது
9. **அடுக்குத் தொடர்** - அடுக்கு மொழியைக் கொண்டது.
   பாம்பு பாம்பு

## தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 1. எழுவாய்த்தொடர் | நல்லது நல்லது |
| 2. விளித்தொடர் | உறுதவம் |
| 3. வேற்றுமைத் தொடர் | பறித்து எறிந்தான் |
| 4. வினைமுற்றுத் தொடர் | ஜனாதிபதி பேசினார் |
| 5. பெயரெச்சத் தொடர் | பேசினார் ஜனாதிபதி |
| 6. வினையெச்சத் தொடர் | நண்பா, வா |
| 7. இடைச்சொற்றொடர் | சிறந்த கவிதை |
| 8. உரிச்சொற்றொடர் | சோற்றை உண்டான் |
| 9. அடுக்குத் தொடர் | இனிப்போவான் |

## தொகைநிலைத் தொடர்கள்

ஏதாவது ஓர் உருபு மறைந்து வருவது தொகைநிலைத் தொடர் ஆகும்.
நீர் குடித்தான் - (ஐ உருபு மறைந்து வருகிறது)
இது ஆறு வகைப்படும்

1. **வேற்றுமைத் தொகை** - வேற்றுமை உருபு மறைந்து வருவது
   கல்லெறிந்தான் (கல்லால் எறிந்தான்)
2. **பண்புத்தொகை** – ஆகிய என்னும் பண்புருபு மறைந்து வருவது
   செந்தாமரை ( செம்மை ஆகிய தாமரை)
3. **வினைத் தொகை** – காலம் மறைந்து வருவது
   கடிநாய் ( கடித்த நாய், கடிக்கின்ற நாய், கடிக்கும் நாய் என வரவேண்டும்.)
4. **உம்மைத் தொகை** – உம் இடைச்சொல் மறைந்து வருவது
   பால்பழம் (பாலும் பழமும்)
5. **உவமைத் தொகை** – போல என்றும் உவமை உருபு மறைந்து வருவது
   மதி முகம் (மதி போல முகம்)
6. **அன்மொழித் தொகை** – தொடருக்கு அப்பால் வேறொரு பொருள் மறைந்து வருவது
   தேன்மொழி வந்தாள் (தேனைப் போல மொழி பேசும் பெண் வந்தாள் என வரும்)

## தொடர்புபடுத்துக.

| | | |
|---|---|---|
| 1. | வினைத்தொகை | கயல்விழி வந்தாள் |
| 2. | வேற்றுமைத் தொகை | இராப்பகல் |
| 3. | பண்புத்தொகை | மதிமுகம் |
| 4. | உவமைத்தொகை | என்வீடு |
| 5. | உம்மைத்தொகை | குடிநீர் |
| 6. | அன்மொழித் தொகை | செந்தாமரை |

## குற்றாலக்குறவஞ்சி

**பின்வரும் வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கீறிடுக.**

1. முழங்கு திரைப் புனலருவி …… இங்கு திரை என்பது
   1.அலை 2.கரை 3.மணல் 4.மழை
2. செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும். இங்கு பரி என்பது
   1.யானை 2.தேர் 3.குதிரை 4.சூரியன்
3. "புவனம் மூன்றும் வலஞ் செயும் நாடு…" இங்கு புவனம் என்பது
   1.வானம் 2.உலகம் 3.சூரியன் 4.சந்திரன்
4. "நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்…." கன்னல் என்பது
   1.நெல் 2.மாம்பழம் 3.கரும்பு 4.தயிர்
5. "சூழ மேதி இறங்கு துறையிற்….." இங்கு மேதி என்பது
   1.எருமை 2.வாளை 3.பலாக்கனி 4.மீன்கள்

### சுருக்கமான விடை தருக

1. திருக்குற்றாலக் குறவஞ்சியைப் பாடியவர் யார்? இக்குறவஞ்சி எக்காலத்திற்குரியது?
   திரிகூடராசப்பக் கவிராயர்
   நாயக்கர் காலம்
2. ஏழு பருவப் பெண்களும் யாவர்?
   பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்
3. "மாத மூன்று மழையுள்ள நாடு
   வருஷ மூன்று விளைவுள்ள நாடு"
   அ) இங்கு குறிப்பிடப்படும் நாடு எது?
      குற்றால நாடு
   ஆ) விளைவு என்பது எதனைக் குறிக்கின்றது?
      பயிர்கள் விளைகின்றமையை
4. "வானரங்கள் கனி கொடுத்து மந்தியொடு கொஞ்சும்" இங்கு
   அ) வானரம் என்பது யாது?
      (ஆண்) குரங்கு
   ஆ) மந்தி என்பது யாது?
      பெண் குரங்கு
5. "தேனருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகும்" இங்கு கையாளப்பட்டுள்ள அணி யாது?
   உயர்வு நவிற்சி அணி

6. "முழங்கு திரைப் புனலருவி கழங்கென முத்தாடும்

முற்றமெங்கும் பரந்து பெண்கள் சிற்றிலைக் கொண்டோடும்''......

அ) இங்கு கையாளப்பட்டுள்ள அணி யாது?

உவமை அணி

ஆ) இங்கு பெண்கள் விளையாடும் விளையாட்டுக்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?

கழங்கு விளையாடுதல்

சிற்றில் கட்டி விளையாடுதல்

7. ''வேதம் மூன்றும் பலாவுள்ள நாடு
விஷேசம் மூன்றும் குலாவுள்ள நாடு''

அ) இங்கு வேதங்கள் மூன்றும் என குறிப்பிடப்படுபவை எவை?

வேர், மரம், பயன்

ஆ) விஷேசங்கள் மூன்றும் எவை?

நித்தியம், நைமித்தியம். காமியம்

8. ''வருவிருந்துக் குபசரிப்பார் போல்
தாழை சோறிட வாழை குருத்திடும்..'' இப் பாடலிலே கையாளப்பட்டுள்ள அணி யாது?

உவமை அணி

விளக்குக?

உவமானம் - வாழையில் தாழம்பூக்கள் சொரிதல்

உவமேயம் - வருகின்ற விருந்தினரை உபசரித்தல்

பொதுத்தன்மை – உபசரித்தல்

9. ''கிம்புரியின் கொம்பெடுத்து வெம்புதினை இடிப்போம்''

அ) இங்கு குறிப்பிடப்படும் குற்றால மலை வாழ் மக்களின் செயற்பாடு யாது?

தினை இடித்தல்

ஆ) கிம்புரியின் கொம்பு எனக் குறிப்பிடப்படுவது எதனை?

களிற்று யானையின் தந்தத்தை

10. ''போதம் மூன்றும் நலம் செயும் நாடு
புவனம் மூன்று நலஞ்செயு நாடு.....''

அ) இங்கு போதம் மூன்றும் எனக் குறிப்பிடப்படுபவை?

பிறப்பு, வாழ்வு, இறப்பு

ஆ) புவனம் மூன்றும் எவை?

மேல், கீழ், நடு

### பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. திருக்குற்றால மலையின் மலைவளம் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?
   - இனிய பழங்களை குரங்குகள் பறித்துண்ணும் வளம் உடையது.
   - வான் வழி செல்லும் சித்தர்கள் அடிக்கடி வந்து காயசித்தி மூலிகைகளை வளர்க்கும் இடமாய் விளங்குவது
   - தேன் அருவியானது அலைகளை எழுப்பி வானில் இருந்து ஒழுகுவது போல் இருக்கும்.
   - சிவபெருமான் கோயில் கொண்டு வீற்றிருக்கும் சிறப்புடையது.
   - முழங்கும் திரைகளை உடைய அருவிகள் முத்துக்களைக் கொண்டு வந்து தள்ளிவிடும் சிறப்புடையது.
   - பெண்கள் சிற்றில் கட்டி விளையாடுதல், மலைச்சாரலில் கிழங்குகளைக் கிள்ளி எடுத்தல், தேன் எடுத்தல், களிற்று யானைக் கொம்பினால் வறுத்த தினையை இடித்தல் என்பன பண்பாட்டுச் செயல்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.
   - சண்பக மலர்களின் நறுமணமானது மலையெங்கும் பரவியபடி இருக்கும்.

2. திருக்குற்றால நாட்டுச் சிறப்புக்கள் எவை?
   - எருமைகள் நீராடும் நீர்த்துறைகள் உள்ள நாடு
   - கூழை வாசப் பலாமரங்கள், வாழை மரங்கள், தாழை மரங்கள் என்பன செழிப்புற்று விளங்கும் நாடு.
   - மாதம் மும்மாரி பொழிதல், வருசம் மூன்று விளைச்சல்கள் காணப்படுதல், வேதங்கள் குறும்பலாவின் பாகங்களாக விளங்குதல், ஆலயங்களில் நித்திய, நைமித்திய, காமிய சிறப்புக்கள் விளங்குதல் .
     பிறப்பு, வாழ்வு, இறப்பு ஆகிய உயிர்களின் மூன்று நிலைகளிலும் நன்மை காணப்படுதல். மூவுலகத்தினரும் வலஞ் செய்து வழிபடல், நாதம் மூன்றுருவாகிய குற்றால நாதர் கோயில் கொண்டிருத்தல்.
   - குற்றால நாட்டுக்கு வந்து சேர்ந்தவர் பாவங்கள் நீங்கும் சிறப்புடையது.
   - கரும்பும், செந்நெல்லும் நெருங்கிக் காணப்படுதல், மாம்பழக் கொத்துக்கள் தூங்கிக் கிடத்தல், வீடுகளில் தயிர் கடையும் மத்துக்கள் சுழலல், மங்கையரின் கொங்கைகள் மகிழ்ச்சியினால் வீங்கல், கொல்லைகளில் முல்லைகளின் அரும்புகள் வெடித்தல், பேரிகைகளின் மங்கல ஒலிகள் ஏக்கத்துடன் எழல்.
3. திருக்குற்றால நாதரின் சிறப்புக்கள்?
   அ) கூனல் இளம்பிறை முடித்த வேணியலங்காரர்
   ஆ) வழங்கு கொடை மகராசர் குறும்பலாவினீசர்
   இ) நாதம் மூன்றுருவானவர் - அரி, அயன், அரன்
4. திருக்குற்றாலக் குறவஞ்சியில் கையாளப்பட்டுள்ள அணிகளை விளக்குக?
   உவமை அணி
   - முழங்குதிரைப் புலனருவி கழங்கெனமுத்தாடுதல்
     உவமானம் - கழங்கு விளையாடுதல்
     உவமேயம் - அருவி முத்துக்களை உருட்டுதல்
     பொதுத் தன்மை – சேர்தல்
   - தாழை சோறிட வாழை குருத்திட
     உவமானம் - தாழை சோறிட வாழை குருத்திட
     உவமேயம் - வருவிருந்தினருக்கு உபசரித்தல்
     பொதுத் தன்மை – உபசரித்தல்

   உயர்வு நவிற்சி அணி

   "தேனருவித் திரை எழுப்பி வானின் வழி ஒழுகும்
   செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழகும்"
   தேனலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும்.

**சுருக்கமான விடை தருக.**

1. சந்தி பிரித்து எழுதுக.
   கழியும் பிழைபொருட் டள்ளி நன்னூலாங்

கழியும் பிழை பொருள் தள்ளி நல் நூலாம்

2. வரை என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாக தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.
   பெயர்:- நாங்கள் சுற்றுலாவிற்குச் சென்ற பொழுது சிவனொளிபாத வரையில் ஏறினோம்.
   வினை:- தம்பி சுவரோவியங்களை அழகாக வரைந்தான்.
3. "ரவி ஓவியம் வரைந்தான்" இவ்வாக்கியத்தை செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக?
   ரவியால் ஓவியம் வரையப்பட்டது.
4. பின்வரும் வாக்கியத்தைப் பொருள் மயக்கமற்ற முறையில் திருத்தி எழுதுக.
   "முன்னாள் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பாடசாலைக்கு வருகை தந்தார்."
   பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பாடசாலைக்கு வருகை தந்தார்.
5. தனக்குச் சீடர்கள் அனைவரும் குருதட்சணை தரவேண்டும் எனத் துரோணர் கூறினார். இவ் வாக்கியத்தின் தலைமைத் தொடரையும் சார்புத் தொடரையும் குறிப்பிடுக?
   தலைமைத் தொடர் - துரோணர் கூறினார்
   சார்புத் தொடர் - சீடர்கள் அனைவரும் குருதட்சணை தரவேண்டும்
6. பாலோடு தண்ணீர் கலந்தான். இங்கு கு உருபு உணர்த்தும் பொருள் யாது?
   கலப்புறு பொருள்
7. மாலாவிற்கு நடனம் ஆடத்தெரியும்
   மாலாவிற்குப் பாடல் பாடத் தெரியும்
   உம் என்ற இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி இவ்விரு வாக்கியங்களையும் இணைத்து ஒரு வாக்கியமாக எழுதுக.
   மாலாவிற்கு நடனம் ஆடவும் பாடல் பாடவும் தெரியும்
8. பின்வரும் கடித அமைப்பு முகவரியை ஒழுங்குபடுத்தி எழுதுக.
   யாழ்ப்பாணம். 20.04.2020, இல 19, ஆனந்தன், புகையிரத நிலைய வீதி
   ஆனந்தன், இல 19, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம். 20.04.2020,
9. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.
   சாதனை படைத்த மாணவனுக்கு பாடசாலையில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது
   எழுவாய் - வரவேற்பு  பயனிலை - அளிக்கப்பட்டது
10. தலையால் நடத்தல் என்ற மரபுத் தொடரின் பொருள் யாது?
   முறைதவறி நடத்தல்